அறிவுத்தளத்திலும் அரசியல் தளத்திலும்

மிகப்பெரும் மாற்றுச் சிந்தனை மரபை முன்னெடுத்தவர்!

பண்டிதர் அயோத்தி தாசர் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, மே 22-

"அறிவுத்தளத்திலும் அரசியல் தளத்திலும் மிகப்பெரும் மாற்றுச் சிந்தனை மரபை முன்னெடுத்த அயோத்திதாசரின் புகழ் வாழ்க" என்று அவரது பிறந்தநாளை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பண்டிதர் அயோத்திதாசர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

திராவிடன், தமிழன் ஆகிய சொற்களை அரசியல் தளத்தில் அடையாளச் சொற்களாகப் பயன்படுத்திய முன்னோடியும், தமிழ்ச் சிந்தனை மரபின் தவிர்க்க முடியாத ஆளுமையுமாகிய பண்டிதர் அயோத்திதாசர் அவர்களின் பிறந்தநாள்!

அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பதைவிடச் சாதிப் பெருமையைப் புறக்கணிப்பதுதான் முதன்மையானது என அவர் அன்றே முழங்கியது இன்றும் எண்ணிப் பார்க்கத்தக்கது. பண்டிதரின் கருத்துகளை ஊன்றிப் படிப்போம், அவரது பல்துறைப் பங்களிப்புகளை நமது அரசு அமைத்து வரும் நினைவு மண்டபம் உள்ளிட்ட முயற்சிகளின் வழியே அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்வோம்!

அறிவுத்தளத்திலும் அரசியல் தளத்திலும் மிகப்பெரும் மாற்றுச் சிந்தனை மரபை முன்னெடுத்த அயோத்திதாசரின் புகழ் வாழ்க!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

முதல்வரின் அறிவுறுத்தலின்படி அதிகரித்து வரும் மின் தேவையை கருத்தில் கொண்டு

போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு மின் வாரியம் செயல்படுகிறது!

மறைமலை நகரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்குப் பின்னர் அமைச்சர் செந்தில்பாலாஜி பேட்டி!

சென்னை, மே 22 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி அதிகரித்து வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் பாதிக்காத வண்ணம் போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு மின் வாரியம் செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

தமிழ்நாட்டின் ஒப்பற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் இதுவரை தமிழ்நாடு முழுவதும் பழுதடைந்த மின் கம்பங்கள் துறையின் வாரியாக கணக்கெடுக்கப்பட்டு 95,000க்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் புதிதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல, தமிழ்நாடு முழுவதும் குறைந்த மின் அழுத்தம், அதிக மின் பளு எந்தெந்த மின்மாற்றிகளில் இருக்கிறது என்பதை கணக்கெடுத்து ஒட்டுமொத்தமாக இரண்டு ஆண்டுகளில் 40,020 புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. புதிய மின் தேவைகளை கணக்கிலே கொண்டு 388 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, கூடுதல் மின் உற்பத்திக்கான திட்டங் களை செயல்படுத்துவதற்கான உத்தரவுகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தமாக, சட்டமன்றத்தினுடைய கூட்டத்தொடரில் தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளிலும் தொகுதிகள் வாரியாக செய்யப்பட்ட பணிகள் புத்தகமாக அச்சிடப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அந்தந்த தொகுதிகளில் நடைபெற்றப் பணிகளை அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது, இருந்தும் கூட, இப்பொழுது கோடைகாலம் இந்த கோடைகாலத்தில் தற்போது தமிழ்நாட்டினுடைய மின் நுகர்வு என்பது அதிகமாக உயர்ந்திருக்கின்றன. குறிப்பாக 2021க்கு முன்பாக 16,000 மெகாவாட் இருந்த உச்ச நிலை என்பது இப்போது 19,387 மெகாவாட் அளவிற்கு உயர்ந்திருக்கின்றன.

சென்னையை பொறுத்தவரை 66 மில்லியன் யூனிட் என்ற ஒரு நாள் நுகர்வு என்பது 90 மில்லியன் யூனிட் அளவிற்கு உயர்ந்துள்ளது. எனவே, இந்த உயர்வுகளின் காரணமாக கோடை காலத்தில் அதிகரிக்கின்ற மின் தேவையின் காரணமாக ஏறத்தாழ 4 இலட்சம் மின் மாற்றிகளில் ஒன்று அல்லது இரண்டில் பழுது ஏற்படும்போது உடனடியாக சென்று மின் வாரியத்தினுடைய அலுவலர்கள், அதிகாரிகள் அந்த சம்பவ இடத்திற்கு சென்று பாராமரிப்பு பணிகளை மேற்கொண்டு உடனுக்குடன் மின் விநியோகம் செய்யப்படுகிறது. குறிப்பாக, காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏற்கனவே பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைக்கப்பட்டது, புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டதை தொடர்ந்து இன்னும் பல்வேறு கோரிக்கைகளை இந்த ஆய்வு கூட்டத்திலே முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைகள் எல்லாம் ஒரு மாத காலத்திற்குள் விரைவாக முடிக்கப் படவேண்டும் என்று துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் பொறுத்தவரை வளர்ந்து வரக்கூடிய தொழில் நகரமாக மாறி வரக்கூடிய மாவட்டங்களாக அமைந்திருக்கின்றன. இங்கு கூடுதல் மின் தேவை அதிகரித்து வருகின்றன. அதை கவனத்திலே கொண்டு சிறப்பு ஆய்வு பணிகளை மேற்கொண்டு அந்த பணிகள் உடனுக்குடன் சரிசெய்வதற்கு துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கின்றன.

நேற்று ஒரு நாளில் மட்டும் 26 இலட்சம் யூனிட் மின்சாரம் தமிழ்நாட்டில் உபரியாக இருக்கக்கூடிய மின்சாரம் வெவ்வேறு மாநிலத்திற்கு யூனிட்டிற்கு 9 ரூபாய் 76 பைசாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. வேறு மாநிலங்களுக்கு மின்சாரத்தை வழங்கும் அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் வளர்ந்திருக்கிறது. மற்ற இடங்களுக்கு உச்சபட்ச தேவையாக இருக்கிறது.

சென்னையை பொறுத்தவரைக்கும் பாத்தோமேயானால் வெறும் 66 மில்லியன் யூனிட்டில் இருந்து 90 மில்லியன் யூனிட் அளவிற்கு உயர்ந்திருக்கிறது, இதையெல்லாம் கவனத்திலே கொண்டு பணிகள் மிக வேகமாக செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சென்னையை கவனத்தில் எடுத்துக்கொண்டால் 4,700 RMU புதிதாக இரண்டு ஆண்டுகளில் நிறுவப்பட்டுள் ளன. 3,447 புதிய மின் மாற்றிகள் சென்னையில் மட்டுமே நிறுவப் பட்டிருக்கின்றன. 3,000 கிலோமீட்டர் அளவிற்கு புதிதாக யு.ஜி கேபிள் அமைக்கப்பட்டுள்ளன.

இருந்தாலும் கூட இன்னும் 20, 30 சதவீதம் பணிகள் செய்யவேண்டி இருக்கிறது, அதையும் கவனத்தில் கொண்டு வரக்கூடிய இந்த கோடைக்காலம் முடிந்த பிறகு வரக்கூடிய நாட்களில் அந்த பணிகள் மிக வேகமாக போர்கால அடிப்படையில் செய்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியுள்ளார்கள், மிக விரைவாக அந்த பணிகளை அமைச்சர் அவர்களின் தலைமையில் இந்த ஆய்வு பணிகள் நடைபெற்று முடிந்திருக்கிறது.

காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்காக பொறியாளர்களை பொறுத்தவரை இப்பொழுது, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களை நிரப்புவதற்கு அனுமதிகளை வழங்கியிருக்கிறார்கள். மீதம் இருக்கக்கூடிய மிக முக்கியமான எந்தெந்த பணியிடங்கள் தேவை என்பதை கணக்கிட்டு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு விரைவாக எடுத்து செல்ல இருக்கின்றோம். முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்கான நடவடிக்கை நிச்சயமாக துறை ரீரியாக எடுக்கப்படும்.

முதல்கட்டமாக சென்னை மாநகராட்சியின் பகுதிகளில் முழுவதுமாக புதைவடகேபிள்கள் அமைக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. ஒரு 7 கோட்டங்களில் பணி நிலுவையில் உள்ளது, அது இப்போழுது சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டுள்ளன. மற்ற மாநகராட்சிகளில் விரிவு படுத்தப்பட்ட தற்கு பிறகுதான் பேரூராட்சி களில் உள்ள குறையை கவனத்தில் கொள்ளலாம்.

தொடந்து அதுபோன்ற நிகழ்வுகள் நடந்துகொண்டு தான் இருக்கிறது. எப்படி மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று துறையின் சார்பாகவும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றன. தொழில் வளர்ச்சி இரண்டு ஆண்டுகளில் அபரிமிதமாக தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற திராவிட மாடல் ஆட்சியில் வளர்ந்து வருகின்றன. அதிலேதான் இப்போது உற்பத்தி அதிகரிக்கின்றபோது நமது தேவைகளும் அதிகரித்து வருகிறது. அதற்கு தான் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்தக் கூடிய உத்தரவுகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

டாஸ்மாக்கை பொறுத்தவரை சில நிர்வாக ரீதியான, சில சீர்திருத்தங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதாக வரக்கூடிய செய்திகளும் அல்லது முழு நேரம் செயல்பட்டு வரக்கூடிய புகார்களை அதன் மீது நடவடிக்கைகளை எடுக்கின்றபொழுது அதற்கு வேற பாடங்கள் கற்பிக்கப்படுகிறது. மால் ஷாப்பில் ஆட்டோமேட்டிக் வெண்டிங் இயந்திரம் வைத்தால் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது தடுத்து நிறுத்தப்படும். ஆட்டோமேட்டிக் வெண்டிங் இயந்திரம் கடையினுடைய உள்புறத்தில் வைக்கிறார்கள். அதை இரல்வே நிலையங்களிலோ, பேருந்து நிலையங்களிலோ ஏடிஎம் இயந்திரம் போல் வைக்க போகிறார்கள் என்ற செய்திகள் சித்தரித்து வெளியிடப்படுகின்றன. இதை நிர்வாக ரீதியாக அதை நடைமுறைக்கு கொண்டு வரும்போது உற்பத்தி தொடங்கி கடைசி விநியோகம் வரை கூர்ந்து கவனிக்கூடிய வகையில் அதுமுடியும்.

டாஸ்மாக் கடைகளை தவிர வேறு இடங்களில் மொத்தமாக பாட்டில்கள் பறிமுதல் செய்யும்பொழுது எந்த கடையில் இருந்த அந்த பாட்டில்கள் ஒட்டுமொத்தமாக பெற்றார்கள் என்று எடுத்து பார்க்க முடியும். இது போன்ற சீர்திருத்தங்களை செய்கின்றபொழுது தான் சில கருத்துக்கள் விபரீதமான கருத்துக்கள், சில உண்மைக்கு மாறான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. எனவே, 1,977 பேர் கூடுதல் விலைக்கு விற்பனை செய்தவர்கள் மீது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூ.5.5 கோடி அளவிற்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. வரக்கூடிய நாட்களின் இன்னும் சீர்திருத்தங்களை செய்து சிறந்த முறையில் நீங்கள் சொல்லக்கூடிய இந்த குறைகள் எல்லாம் இல்லாத அளவிற்கு மிகத் திறமையான ஒரு நல்ல நிர்வாகத்தை இன்னும் இரண்டொரு மாதங்களில் சிறப்பாக ஏற்படுத்தலாம்.

வழிபாட்டு தளங்களுக்கு அருகே இருக்கக்கூடிய கடைகள், பொதுமக்களுக்கு வேண்டாம் என்று சொன்ன இடங்கள், அதேபோல கல்வி நிறுவனங் களுக்கு அருகில் இருக்கக்கூடிய கடைகள் இதெல்லாம் கணக்கெடுக்கப்பட்டு துறை ரீதியாக அறிவிப்பு இல்லாமலே 96 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. நாளை அல்லது நாளை மறுநாள் ஆய்வு செய்து பொதுமக்கள் விரும்பவில்லை என்றால் அந்த இடத்தில் இருந்தும் கடைகள் மூடப்படும்.

நிர்வாக ரீதியாக இப்போது மின்சார வாரியமாக இருக்கட்டும் அல்லது மற்ற துறைகளாக இருக்கட்டும் நீங்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் துறையின் கவனத்திற்கு கொண்டுவரக்கூடிய அளவில் இருந்தால் அது நிச்சயமாக அரசு கவனத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

புதியதாக 2 உறுப்பினர்கள் சேர்ப்பு: மாநில கல்விக் கொள்கையை வகுக்கும்

உயர்மட்டக் குழு - அறிக்கை அளிக்க 4 மாதங்கள் கால நீட்டிப்பு!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

சென்னை, மே 22-

மாநிலக் கல்விக் கொள்கையை வகுக்கும் உயர்மட்டக் குழுவில் மேலும் இருவர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அக்குழு அறிக்கை அளிக்க மேலும் 4 மாதங்கள் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு :

தேசியக் கல்விக் கொள்கைக்கு மாற்றாக, தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, நிகழ்காலச் சூழல் மற்றும் எதிர்காலத் தேவைகள் மற்றும் கனவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ்நாடு மாநிலத்திற்கென தனித்துவமானதொரு மாநிலக் கல்விக் கொள்கையினை வகுக்க தமிழ்நாடு அரசு உறுதிப் பூண்டுள்ளது. இதற்கென, மாண்புமிகு நீதியரசர் (ஓய்வு) த.முருகேசன் அவர்கள் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைத்து 01.06.2022 அன்று தமிழ்நாடு அரசு ஆணையிட்டது (அரசாணை எண் 98).

மேற்காணும் நோக்கத்திற்கிணங்க, கடந்த ஓராண்டு காலமாக இக்குழு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட கள அளவில் கல்வி சார்ந்து செயல்படும் அணைவரிடமும் பொது கலந்துரையாடல் போன்ற செயல்பாடுகள் இதில் அடங்கும். அத்துடன் ஆசிரியர் சங்கங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், அரசு மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் உள்ளிட்டப் பலருடனும் தனித்தனியான கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மேலும், குழுவினர் சில கல்வி நிறுவனங்களைப் நேரடியாக பார்வையிட்டு, அவர்கள் பார்வையிலிருந்து சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்கான முயற்சிகளையும் எடுத்தனர்.

இவற்றைக் கடந்து, நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்காக அரசின் பல்வேறு துறைகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இக்கலந்துரையாடல்கள் குறிப்பாக கல்விக் கொள்கையின் தாக்கத்தை செயல்பாட்டுத் தரப்பிலிருந்து புரிந்து கொள்ளும் முனைப்புடன் நடத்தப்பட்டன. பல்வேறு அரசு துறைகளின் செயலாளர்கள் தங்கள் துறை சார்ந்த கருத்துக்களையும் தரவுகளையும் குழுவின் முன் நேரில் விளக்கி அறிக்கையாக அளித்தனர். அரசு துறைகளுடன் நடந்த கலந்துரையாடல்கள் மிகவும் வெளிப்படையான முறையில் குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்டன. குழுவின் செயல்பாடுகளில் எவ்விதத்திலும் அரசு அதிகாரிகளின் தலையீடு இருக்கவில்லை. குழு முழுமையான சுதந்திரத்துடன் செயல்பட்டு வருகிறது.

தெளிவாக வரையறுக்கப்பட்ட நோக்கங்களுடன் கூடிய ஒரு பொதுக் கொள்கை அறிக்கையை அளிப்பதே குழுவின் இலக்கு என்ற அடிப்படையில், கொள்கை வகுப்பதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் இடையிலான நுட்பமான தொடர்புகளை கவனத்தில் எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. ஒரு கொள்கை எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தக்க செயல்பாட்டு கட்டமைப்பை உருவாக்க வேண்டுமெனில், தற்போது நிலவும் சூழலின் பன்முகத் தன்மையை முழுமையாக உள்வாங்கியிருப்பது முதன்மையானத் தேவையாகும். இதை கவனத்தில் கொண்டே, களத்தில் நேரடியாக செயல்படுபவர்கள் தொடங்கி அரசின் உச்ச அதிகாரிகள் வரை தொடர்புடைய அனைவரிடமும் கலந்துரையாடுவதை குழு உறுதிப்படுத்தியது.

நீதியரசர் (ஓய்வு) த. முருகேசன், தலைமையில், தமிழ்நாட்டிற்கென ஒரு தனித்துவமான மாநில கல்விக் கொள்கையை உருவாக்கும் பணியில், ஆழமான ஆய்வுக் கண்ணோட்டத்துடன் குழு செயல்பட்டு வருவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. குழுவின் செயல்பாடுகள் மீது அரசு முழுமையான நம்பிக்கையைக் கொண்டுள்ளது.

மேலும், இந்த உயர்மட்டக் குழுவில் கீழ்க்காணும் இரு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது:

1. டாக்டர் டி. ஃப்ரீடா ஞானராணி, முதல்வர் (ஓய்வு), காயிதே மில்லத் அரசு பெண்கள் கல்லூரி, சென்னை.

2. டாக்டர். ஜி. பழனி, பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

குழு தனது இறுதி அறிக்கையை அளிக்க மேலும் நான்கு மாதங்கள் கால நீட்டிப்பு தரப்பட்டுள்ளது. அதன்படி குழு 2023 செப்டம்பர் மாத இறுதிக்குள் தனது அறிக்கையை அளிக்கும்.

குழுவின் அறிக்கை வரப்பெற்றதும் அதில் உள்ள பரிந்துரைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்கால நலன் மற்றும் நம் மாநிலத்தின் வளர்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிற்கென சிறப்பானதொரு கல்விக் கொள்கையை வகுக்கும்.

அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கிட வேண்டும் என்ற உன்னத நோக்கோடு சமச்சீர் கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்களை மேற்கொண்ட தமிழினத் தலைவர் கலைஞர் காட்டிய வழியில் நடைபோடும் நமது அரசு, மாநில உரிமைகளைக் காக்கும் விதத்தில் தொடர்ந்து செயலாற்றும்.

இவ்வாறு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில்

ரூ.63 கோடி மதிப்பீட்டில் நான்கு வழித்தடபாதை!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் திட்டப்பணியை துவக்கி வைத்தார்!

அரியலூர், மே 22-

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைமையிடத்தை இணைக்கும் வகையில் சுமார் 2500 கி.மீ நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை பகுதிவாரியாக இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக தரம் உயர்த்துதலில், நடப்பு நிதி ஆண்டில் (2022-2023) சுமார் 150 கி.மீ நீளம் உள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் கிராமத்தில் அரியலூர் நெடுஞ்சாலைக் கோட்டம், ஜெயங்கொண்டம் உட்கோட்டத்தில் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.63 கோடி மதிப்பீட்டில் விருத்தாசலம் ஜெயங்கொண்டம் மதனத்தூர் சாலை கி.மீ 21/10 22/6 (SH 140) வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்தல் மற்றும் கி.மீ.26/10 சிறுபாலத்தை திரும்பக் கட்டுதல், வடிகால், தடுப்புச்சுவர் மற்றும் சென்டர் மீடியன் கட்டுதல், கல்வெட்டுகள் அகலப்படுத்தும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். மேலும், சாலை ஓரத்தில் மரக்கன்றுகளையும் நட்டார்.

மேலும், இச்சாலை மேம்படுத்துவதன் மூலம் கூவத்தூர், தண்டலை, கல்லாத்தூர் மற்றும் கீழக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பயன்பெறுவார்கள். எனவே, இச்சாலை பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து சாலையின் இருபுறமும் தற்போது உள்ளது போல் பசுமையான மரங்களை நட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் உத்திராண்டி, உதவி கோட்டப் பொறியாளர் கருணாநிதி, உதவி பொறியாளர் விக்னேஷ் ராஜ், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், முன்னாள் ஒன்றிய செயலாளர் க.தர்மதுரை, ஆர்.கலியபெருமாள், ரெங்க.முருகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர். இராமராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பானுமதி, துணை அமைப்பாளர் இராணி மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 26-05-2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.5.2023

இரா.கிரிராஜன், எம்.பி.
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

தருமபுரி மேற்கு மாவட்டம்,கடத்தூர் மேற்கு ஒன்றியம் ரேகடஹள்ளி,மோட்டாங்குறிச்சி, சுங்கரஹள்ளி,சில்லாரஹள்ளி, அரூர் கிழக்கு ஒன்றியம் தீர்த்தமலை, வேடகட்டமடுவு, மத்தியம்பட்டி,வீரப்பநாயக்கன்பட்டி, வேப்பம்பட்டி, பொன்னேரி, எல்லப்புடையாம்பட்டி, ஆகிய ஊராட்சிகளில் புதிய உறுப்பினர் சேர்க்கையை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன்,ஆய்வு செய்தார். அரூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சந்திரமோகன்,கடத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சிவபிரகாசம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.சித்தார்த்தன்,கே.சென்னகிருஷ்ணன், மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் கு.தமிழழகன்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கொண்டயம்பள்ளி க. இராமசாமி
மே 22 (1991)

இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, தலைவாசல் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

ஆத்தூர் வட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவராகவும் – வீரகனூர் வீடுகட்டும் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1964ல் நடைபெற்ற இந்தி சட்டஎரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் எதிர்க் கட்சியினரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.